நூலகங்களுக்குப் புத்தகங்களைக் கொள்முதல் செய்வதில் முறைகேடா? வெட்கம்! வெட்கம்!

இழிவான செயலில் ஈடுபட்டிருப்போர் யாராயினும் தண்டிக்கப்பட வேண்டும்!

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ.10 -

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கோவையில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட "பெரியார் அறிவுலகம்" என்னும் அறிவார்ந்த அறிவியல் உலகம், நூலகத்தைப் பார்த்து, கொண்டாடி மகிழ்ந்திருந்த சூழலில், எதற்காக அந்தச்சிறப்பான அமைப்பு உருவாக்கப்பட்டதோ, அதையே சிதைக்கும் விதமாகவும், கொச்சைப்படுத்தும் விதமாகவும் ஒரு பேரதிர்ச்சி தரும் செய்தி 6.11.2026 அன்று வெளிவந்துள்ளது.

எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்கள் எழுதியுள்ள கட்டுரையையும், அதனைத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளையும் மிகுந்த கவனத்துடன் படித்தோம்; பார்த்தோம்.

முழுக்க முழுக்க தவறான, பொய்யான தகவல்களைக் கொண்ட போலியான புத்தகங்கள்!

தமிழ்நாட்டின் அறிவு அடையாளமாக உருவாக்கப்பட்டிருக்கும் "பெரியார் அறிவுலகம்" நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள தமிழ் நூல்கள் பகுதியில், சில புத்தகங்கள் அகல்விளக்கு பதிப்பகம், ஃபீனிக்ஸ் பதிப்பகம் என்ற பெயரில் இயங்கும் பதிப்பகங்களின் பெயரில் முழுக்க முழுக்க தவறான, பொய்யான தகவல்களைக் கொண்ட போலியான புத்தகங்களாகச் சுமார் 1800க்கும் மேல் இடம்பெற்றுள்ளன என்று சான்றுக்குச் சில படங்களுடன் எடுத்து எழுத்தாளர் பெருமாள் முருகன் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

விமர்சனங்கள், செய்திகள் வெளிவராது என்று கருதியிருக்க மாட்டார்களா?

தமிழ்ப் பதிப்புலகத்துக்கே இழிவைத் தேடித் தரும் இந்த மோசடி நம்மைக் கொதிப்படையச் செய்கிறது. போலியான பெயரில் எழுத்தாளர்கள், போலி முகவரிகளுடன் பதிப்பகங்கள், செயற்கை நுண்ணறிவு கொண்டு நிரப்பப்பட்டுள்ள கட்டுரைகள் என எவ்வளவு துணிச்சல் இருந்திருந்தால் இத்தகைய அப்பட்டமான மோசடி நடைபெற்றிருக்கும்! இவையெல்லாம் நூலகத்தில் வைக்கப்படுமே, பலரும் படிப்பார்களே, அப்போது இதைப் பற்றி விமர்சனங்கள், செய்திகள் வெளிவராது என்று கருதியிருக்க மாட்டார்களா? அல்லது யார் இதையெல்லாம் படிக்கப் போகிறார்கள் என்று கருதினார்களா?

இப்படியொரு செய்தி வெளிவந்ததும், முறைப்படி இதற்கான அரசு ரீதியான நடவடிக்கைகள் தொடங்கி இருக்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாக, நேற்று காலை முதலே இதனை "அரசியல்" ஆக்கும் நடவடிக்கைகள் மட்டுமே நடைபெற்றுக் கொண்டுள்ளன என்பது பெரும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும். நேற்று காலையிலேயே பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், உடனடியாக இதற்குத் திமுக தான் காரணம் என்று அரசியலாக்கத் தொடங்கினார். அடுத்தடுத்து, புதிய புதிய செய்திகளும், சான்றுகளும் வரவர, இரு தரப்பிலிருந்தும் குற்றச்சாட்டுகள் வெளிவரத் தொடங்கின. ஊடகங்களும், சமூக ஊடகங்களும் விசாரணை (Media Trial) நடத்திக் கொண்டிருக்கின்றன. அதன்மூலம் அவதூறுகள் பெருகுமே தவிர, ஆக வேண்டிய காரியம் நடக்குமா?



ஆட்சியில் இருப்பவர்கள் கையில் தானே நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரம் இருக்கிறது!

இது அரசியல் செய்ய வேண்டிய பிரச்சினையா? ஆட்சியில் இருப்பவர்கள் கையில் தானே நடவடிக்கை எடுக்கவேண்டிய அதிகாரம் இருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்கு என்ன தாமதம்?

நாம் அறிக்கை எழுதும் இந்த நிமிடம் வரை சட்டப்படி இந்த முறைகேட்டை விசாரிக்க எந்தக் குழுவும், அரசு ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பது நமக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

பொத்தாம்பொதுவாக எல்லோரும் பேசி, அதன் மூலம் ஒரு கருத்துருவாக்கம் செய்வதற்குக் காலக்கெடு கொடுக்கப்படுகிறதா?

பதிப்பாளர்கள் வரவேற்றனர்!

நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதில் இருக்கும் பிரச்சினைகள் பல காலமாகப் பேசப்பட்டு வருகின்றன. 2011-2021 அதிமுக ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட புத்தகங்கள் குறித்து கடும் கண்டனங்களை அப்போதே பதிப்பாளர்கள் வெளியிட்டனர். பல முறை அரசுகளிடம் முறையிட்டும், முறையான நடவடிக்கைகள் இல்லை என்று பதிப்பாளர்கள் புலம்பிக் கொண்டிருந்த நிலையில், கடந்த தி.மு.க. ஆட்சியில், 2024 ஆம் ஆண்டு வெளிப்படையான நூல் கொள்முதல் முறையை அறிமுகப்படுத்தினர். அய்.எஸ்.பி.என். பெற்றுள்ள நூல்களைத் தான் வாங்கமுடியும் என்பது உள்ளிட்ட அதன் நடைமுறைகள் கடுமையானவையாக இருந்தாலும், தர மானவையாக புத்தகங்கள் அமைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவையாக இருந்தன. இதன் மூலம் இதில் நடைபெற்று வந்த முறைகேடுகள் தடுக்கப்படுவதற்கான வாய்ப்பு அமைந்ததைப் பதிப்பாளர்கள் வரவேற்றனர்.

அதே போல, சிறப்பு நூலகங்களுக்குப் புத்தகங்களைப் பரிந்துரை செய்வதற்காக, தனித்தனியே வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் பரிந்துரைத்த புத்தகங்களின் பட்டியல்கள் எல்லாம் வெளிப்படையானவை. இத்தகைய குழு ஒன்றில் இடம்பெற்றிருந்தவர் தாம் எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களும். தாங்கள் பரிந்துரைத்த புத்தகங்கள் அல்லாமல், வேறு புத்தகங்கள் இடம்பெற்றிருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி கொள்வதில் நியாயம் இருக்கிறது. அதே போல, எழுத்தாளர் அழகிய பெரியவன் அவர்களும், மூத்த பத்திரிகையாளர் விஜய்சங்கர் அவர்களும் தாங்கள் பரிந்துரைத்தபுத்தகங்களைக் குறித்த செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னணியில் இருக்கும் அதிகாரிகள் யார்?

வல்லுநர் குழு பரிந்துரைத்த புத்தகங்கள் அல்லாமல், புத்தகங்களைக் கொள்முதல் செய்தவர்கள் யார்?

எந்தெந்த புத்தகங்கள் எப்போது கொள்முதல் செய்யப்பட்டன?

இதில் நடைபெற்றுள்ள முறைகேடுகளை அரசியல் கண்ணோடு பார்க்காமல், உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் நோக்கில் செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இந்திரன் மாறினாலும், இந்திராணி மாறுவதில்லை என்பதைப் போல ஆட்சி மாறினாலும், இத்துறைகளில் இருக்கும் அதிகாரிகள் மட்டும் மாறுவதில்லை என்னும் நிலையில், இதன் பின்னணியில் இருக்கும் அதிகாரிகள் யார்?

சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னர், அதிகாரிகளின் ராஜ்ஜியம் நடக்கும் காலத்தில் வாங்கப்பட்ட புத்தகங்கள் யாவை?

புத்தகப் பட்டியலைத் தேர்ந்தெடுக்கும் குழுவுக்கும் மேலாக, அதை இறுதி செய்யும் குழு, விலை உறுதி செய்யும் குழு, உயர்மட்டக் குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் இதில் எப்படி அமைந்தன?

இந்தக் குறிப்பிட்ட புத்தகங்களைக் கொள்முதல் செய்யப் பரிந்துரைத்தவர்கள் யார்? அல்லது பரிந்துரைகள் அல்லாமல் இந்தப் புத்தகங்களை வாங்கியோர் யார்?

ஏராளமான கேள்விகள் எழுகின்றன!

இது, இப்போது 'பெரியார் அறிவுலகம்' நூலகத்தில் மட்டும்தான் நடைபெற்றுள்ளதா?

தந்தை பெரியாரின் பெயரில் உயரிய நோக்கில் அமைக்கப்பட்டுள்ள இந்த அறிவுலகத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்கத்துடன் இத்தகைய மோசடி நடைபெற்றுள்ளதா?

இன்னும் எந்தெந்த நூலகங்களுக்கு இத்தகைய புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன?

போலிப் புத்தகங்களுக்கு அய்.எஸ்.பி.என். எண்களை வாங்கிக் குவித்துள்ளார்கள் என்றால், முறைப்படி நாம் அய்.எஸ்.பி.என். வாங்க முயற்சிக்கும்போதெல்லாம் சந்திக்கும் இடையூறுகள், வரம்புகளையெல்லாம் தாண்டி, ஆயிரக் கணக்கில் எப்படி வாங்கினார்கள்?

இதன் வேர் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறது? என்பன போன்ற ஏராளமான கேள்விகள் எழுகின்றன.

இது அரசியல் பிரச்சினையல்ல என்பதை அரசும், பிறரும் உணரவேண்டும்.

'பெரியார் அறிவுலகம்' குறித்தப் பெருமையான நிகழ்வு நடந்து கடந்த இரு நாட்களாக அதைக் குறித்துப் பேசப்பட்டுவந்த நிலையில், இந்த விளம்பரத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் இருந்த பார்ப்பன ஊடகங்கள், இதைக் கொண்டு பெரியார் பெயரைக் கொச்சைப்படுத்த முடியுமா என்று பார்க்கிறார்கள். அந்தி திகளை வெளிக் கொண்டு வந்த பெரியார் பெயரில் அமைந்துள்ள அறிவுலகம் தான், இத்தகைய மோசடி குறித்தும் முதல் கவனம் குவிக்கக் காரணமாகியுள்ளது.

பெரியார் அறிவுலகத்தின் மீதான எரிச்சலைக் காட்டலாமா?

எதைக் குறித்தும் பதில் அளிக்காத, கருத்து சொல்லாத முதலமைச்சர், இந்தப் பிரச்சினை குறித்து நேற்று உடனடியாக கருத்துத் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும், அதில் ஆட்சியாளருக்கான பொறுப்பு இன்றி, 'பெரியார் அறிவுலகமா? ஊழல் உலகமா?' என்று எழுதியிருப்பதன் பின்னணியில், பெரியார் அறிவுலகத்தின் மீதான எரிச்சலைக் காட்டலாமா?

இது எந்தச் சார்புகளுமற்று விசாரிக்கப்பட வேண்டிய ஒன்று. முறைகேட்டில் ஈடுபட்டோர் யாராயினும், அவர்கள் உரிய குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதற்கென்று உடனடியாக ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டு, உரிய வல்லுநர்கள் குழுவும் அதில் இடம்பெறும்வகையில் ஆணையிட்டு, முழுமையான விசாரணை நடைபெற வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டின் அறிவுச் சமூகத்தின் மீது வீசப்பட்டுள்ள கறை துடைத்தெறியப்பட வேண்டும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய – மாநில உறவுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட

நீதியரசர் குரியன் ஜோசப் குழு கலைக்கப்பட்டது சரியல்ல!

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் கண்டனம்!

சென்னை, நவ. 10 -

நீதியரசர் குரியன் ஜோசப் குழு கலைப்பு குறித்த அரசின் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீர பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர், சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை வருமாறு:

ஒன்றிய - மாநில உறவுகள் குறித்து ஆய்வு செய்து, அரசுக்கு பரிந்துரை வழங்க உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையில் கடந்த ஆட்சியில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி.வி.ராஜமன்னார் தலைமையில் 1969 செப்டம்பர் 22 ஆம் தேதி முதல் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. அதன் பிறகு 50 ஆண்டுகளுக்கு மேலாக மத்திய மாநில உறவுகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.



இவற்றின் மீது முறையாக ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அளிக்க அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவில் இந்திய ஆட்சிப் பணியாற்றி ஓய்வு பெற்ற மூத்த அலுவலர் கே. அசோக் வர்தன் ஷெட்டி மற்றும் கல்வி புலத்திலும், அறிவுத் தளத்திலும் முத்திரை பதித்துள்ள பேராசிரியர் எம். நாகநாதன் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்நிலைக் குழு தனது முதல் தொகுதி அறிக்கையை, கடந்த 2026 பிப்ரவரியில் அரசிடம் வழங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக உயர்நிலைக் குழு, தனது இறுதி அறிக்கையை நிறைவு செய்யும் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்தக் குழு கலைக்கப்பட்டது சரியான நடவடிக்கையல்ல. மத்திய மாநில உறவுகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

அந்த தேவையை கவனத்தில் கொள்ளாமல் நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு கலைக்கப்பட்டதை மறுபரிசீலனை செய்து, அது தனது பணியை முழுவதுமாக முடித்து தருவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

பெரியாரின் அறிவுப் புரட்சியை யாராலும் இருட்டடிப்பு செய்ய முடியாது!

பெரியாரை சிறுமைப்படுத்த நினைப்பவர்கள் சிறுமைப்பட்டுப் போவார்கள்!

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் கண்டனம்!

சென்னை, நவ. 10 -

"பெரியாரின் அறிவுப் புரட்சியை எந்த அரசியல் அதிகாரத்தாலும் இருட்டடிப்பு செய்ய முடியாது. பெரியாரை சிறுமைப்படுத்த நினைப்பவர்கள் வரலாற்றில் சிறுமைப்பட்டுப் போவார்கள்" என்று ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெரியாரின் அறிவுப் புரட்சியைச் சிறுமைப்படுத்தவும், நூலகத்தின் சாதனை திமுகவுக்குச் சென்றுவிடக் கூடாது என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சியிலும் அரங்கேற்றப்படும் அறிவுத் திருட்டு நாடகமா இது?

பெரியாரை எதிர்ப்பதற்குப் பார்ப்பன சனாதன சக்திகள் காலங்காலமாகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வந்திருக்கின்றன. இப்போது பெரியார் பெயரில் அமைந்த நூலக த்தையே சர்ச்சைக்குரியதாக்கி, பெரியாரின் அறிவுப் புரட்சியைச் சிறு மைப்படுத்தும் முயற்சியில் த.வெ.க. அரசு இறங்கியிருக்கிறதா என்ற வலுவான சந்தேகம் எழுகிறது!

கோவையில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவுலக நூலகத்தில் நூல்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. நூல்களின் தரம், பதிப்பகங்களின் நம்பகத்தன்மை, கொள்முதல் நடைமுறைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானதே!

திட்டமிட்டு சர்ச்சைகளை உருவாக்குவதா?

ஆனால், இந்த விவகாரத்தை அணுகும் தவெக அரசின் அரசியல் நோக்கம் என்ன? பார்ப்பனியத்தையும், சனாதனத்தையும், சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், மூடநம்பிக்கைகளையும் தனது வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடியவர் தந்தை பெரியார்.

அப்படிப்பட்ட பெரியாரின் பெயரில் உருவாக்கப்பட்ட அறிவுலக நூலகத்தின் சாதனைகள் மக்கள் மத்தியில் பேசப்படுவதைத் தடுக்கவும், அந்த நூலகத்தின் பெருமை திமுக அரசுக்குச் சென்றுவிடக் கூடாது என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சியிலும் திட்டமிட்டு சர்ச்சைகளை உருவாக்குகிறார்களோ என்ற கேள்வி எழுகிறது.

பெரியார் என்ற பெயரை உச்சரிப்பதற்கும், பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. பெரியாரின் கருத்துகளை ஏற்க மறுப்பவர்கள்கூட அவரது பெயரில் உருவாக்கப்பட்ட அறிவுக் கருவூலத்தைச் சிறுமைப் படுத்தும் அரசியலில் ஈடுபடுவது வன்மையான கண்டனத்திற்குரியது.

முதலமைச்சருக்கு விசாரணை நடத்தும் அதிகாரம் இல்லையா?

இங்கே எழும் மிக முக்கியமான கேள்வி என்ன வென்றால்:

காவல்துறையையும் உள்துறையையும் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் அவர்கள், நூல் கொள்முதல் முறைகேடு குறித்த குற்றச்சாட்டுகளைத் தாமாகவே விசாரிக்க உத்தரவிடாமல், அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ஏன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையான DVACயிடம் புகார் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது?



காவல்துறையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சருக்கு விசாரணை நடத்தும் அதிகாரம் இல்லையா? அல்லது இந்த விவகாரத்தை அரசியல் நாடகமாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதா?

கொச்சைப்படுத்துவதை ஏற்க முடியாது!

தவறு நடந்திருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் விசாரணை என்ற பெயரில் பெரியாரின் அறிவுலகப் பணியையும், அதன் உருவாக்கத்திற்குப் பின்னால் உள்ள அரசியல் சாதனையையும் கொச்சைப்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பெரியார் நூலகத்தில் முறைகேடு நடந்ததா என்பதை மட்டும் விசாரித்தால் போதாது; பெரியாரின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்கத்தோடு அரசியல் காழ்ப்புணர்ச்சியில் யாரேனும் செயல்பட்டார்களா என்பதையும் விசாரிக்க வேண்டும்.

பெரியாரை எதிர்ப்பது என்பது வெறும் அரசியல் எதிர்ப்பு அல்ல; பார்ப்பனியத்தையும் சனாதனத்தையும் எதிர்த்து உருவான சமூகநீதி வரலாற்றையே மறுதலிக்கும் முயற்சியாகும்.

தி.மு.க. ஆட்சியின் சாதனையை அரசியல் ரீதியாக விமர்சிக்கலாம். ஆனால் அந்த விமர்சனத்திற்காகப் பெரியாரின் பெயரையும், அவரது அறிவுப் புரட்சியையும் பலிகடாவாக்கக் கூடாது.

தவெக அரசே! பெரியாரைச் சிறுமைப்படுத்தும் அரசியலைக் கைவிடு! நூலகத்தின் பெயரால் எழுந்துள்ள முறைகேடு குற்றச்சாட்டுகளை நேர்மையான, சுதந்திரமான விசாரணைக்கு உட்படுத்து! அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி உண்மையை மக்களிடம் வெளிப்படுத்து!

பெரியாரின் அறிவுப் புரட்சியை எந்த அரசியல் அதிகாரத்தாலும் இருட்டடிப்பு செய்ய முடியாது. பெரியாரைச் சிறுமைப்படுத்த நினைப்பவர்கள் வரலாற்றில் சிறுமைப்பட்டுப் போவார்கள்!

ஆதித்தமிழர் பேரவை, பெரியாரின் பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதைக் கொள்கைகளின் பக்கம் உறுதியாக நின்று த.வெ.க. அரசின் இத்தகைய அரசியல் அணுகுமுறையைக் கடுமையாகக் கண்டிக்கிறது!

இவ்வாறு இரா.அதியமான் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் கஞ்சா விற்பவர்களை தேடிப் பிடித்து வந்த காவல்துறை

த.வெ.க. ஆட்சியில் கஞ்சா வைப்புத் துறையாக மாறி உள்ளது!

தி.மு.கழகம் கடும் தாக்கு!

சென்னை, நவ. 10 -

கடந்த காலங்களில் கஞ்சா விற்பவர்களை தேடிப் பிடித்து வந்த காவல்துறை, த.வெ.க. ஆட்சியில் கஞ்சா வைப்புத் துறையாக மாறி உள்ளது என்று தி.மு.க. குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து, தி.மு.க. தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கடந்த காலங்களில் கஞ்சா விற்பவர்களை தேடிப் பிடித்து வந்த காவல்துறை, டம்மி சிம்சார் ஆட்சியில் கஞ்சா வைப்புத் துறையாக மாறி உள்ளது.

1000 கோடி மெத் போதைப் பொருளை கடத்திய போதை கடத்தல் மன்னன் த.வெ.க. பூபாலனை கைது செய்யாத சிம்சாரின் ஏவல் துறை, சிவகங்கை திருப்பத்தூர் திருக்காள பட்டியில் டாஸ்மாக்கிற்கு எதிராக போராடிய வணிகரின் கடையில் கஞ்சாவை மறைத்து வைத்து, அவரை கைது செய்ய முயன்றுள்ளது. குற்றவாளிகளை எல்லாம் ப்ரீயா தப்பிக்கவிட்டு பொது மக்களை பிடித்து சிறையில் அடைக்க துடிக்கிறது துப்பு கெட்ட த.வெ.க. அரசு.

ஒருபக்கம் த.வெ.க. நிர்வாகி மெத் போதை பொருள் கடத்துகிறார். மறுபக்கம் போலீசாரே கஞ்சா வைக்கிறார்கள். இதற்கிடையில் டம்மி சி.எம். விஜய் போதை ஒரு ஜாலி என மாணவர்களிடம் பேசுகிறார். இதுதான் தூய சக்தியின் போதை ஒழிப்பு லட்சணம். இதுவா தூய சக்தி என மக்கள் தூ.. தூ.. என துப்புகிறார்கள். டாஸ்மாக்கிற்கு எதிராகப் போராடிய தால், காவல்துறையாலேயே கஞ்சா வைக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளான சிங்கம்புணரி வணிகருடன் கழகம் உறுதியோடு துணை நிற்கிறது. தொடர்புடைய காவல் துறை அதிகாரிகள் மீது துறை ரீதியாகவும், குற்ற வழக்குப் பதிவு செய்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல்துறைக்கு பொறுப்பான டம்மி முதல்வர் விஜய் பாதிக்கப்பட்ட வணிகரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

'வெற்றி' புத்தக ஊழல்!

